0087627

13207

Reg. No. | | | | | | | | |

**II Semester B.Com./B.B.A./B.H.M. Degree Examination, September - 2021**

**TAMIL LANGUAGE**

**(CBCS Scheme Repeaters Prior to 2019)**

**Paper : II Part - I**

**Time : 3 Hours** **Maximum Marks : 70**

**I. விரிவான விடை தருக.**

1. தன் உள்ளம் கவர்ந்த இறைவன் குறித்து திருஞானசம்பந்தர் கூறுவன யாவை? **(10)**

**(அல்லது)**

திருமழபாடி என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை சுந்தரர் எவ்வாறு போற்றுகிறார்?

2. ஒட்டக்கூத்தர் பாடியுள்ள எவையேனும் ஐந்து பாடல்களின் கருத்துகைத் தொகுத்து வரைக. **(10)**

**(அல்லது)**

ஔவயார் பாடியுள்ள ஐந்து பாடல்களின் கருத்துகைத் தனிப்பாடல்கள் வழிநின்று விளக்குக.

**II. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

1. பேடை மயிலோடும் கூடிப் பிணைந்து வருவன கண்டேன். **(4)**

**(அல்லது)**

சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த வித்தகத் தேவர்க்கே
சென்றுதாய் கோத்தும்பீ

2. ஊருக்கு உறந்தைநிகர் கொற்கையோ அம்மானை? **(4)**

[P.T.O

(அல்லது)

வையம் பெறினும் பொய்யுரைக்க
மாட்டார் தொண்டை நாட்டரே.

III. இரண்டிற்கு ஆசிரியர் குறிப்பு வரைக. (2×3=6)

1. புகழேந்திப் புலவர்
2. மாணிக்கவாசகர்
3. ஔவையார்
4. சுந்தரர்

IV. இடியுடன் கூடிய மழைநாளில்–என்னும் சிறுகதைத் தொகுப்பிலிருந்து பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைத் திறனாய்வு செய்க. (2×14=28)

1. மாதா
2. தம்பூரா சோமு
3. இரவுத் தீவுகள்
4. அதை மறந்திட்டிங்களேய்யா!

V. பின்வரும் பகுதியை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி வரைக. (8)

சில பெற்றோர், தம் குழந்தைகள் சரியான கல்வியைப் பெறவேண்டும் என்பதை அறிந்து, அதை அளிக்க முயலுகின்றனர். ஆனால் இவ்வாறு மிக அக்கறையுடனும் நேர்மையுடனும் முயலுபவர்களில் கூட, குழந்தைக்குக் கல்வி புகட்டுவதற்கு முதற்சேவை, தான் கல்வி கற்பதே என்பதையும், தன் குழந்தைக்குத் தவறான எடுத்துக்காட்டாக ஒருபோதும் இருக்காதபடி, தன்னை உணர வேண்டும். தன்னையாளும் திறன் பெற வேண்டும் என்பதையும் அறிந்துள்ளுவர் வெகு சிலரே. எடுத்துக்காட்டின் மூலம் கல்வி புகட்டுவதே மிகச் சிறந்த வழியாகும். குழந்தைக்குக் கற்பிக்கப்படும் கல்விக்குத் தானே எடுத்துக்காட்டாக இல்லாவிடில் நல்லவார்த்தைகளைக் கூறுவதோ அறிவுரைகளை அளிப்பதோ அதிகப் பயனளிக்காது, நேர்மை, வாய்மை, கபடமின்மை, தைரியம், பற்றின்மை, சயநலமின்மை, பொறுமை,

சகிப்புத்தன்மை, விடாமுயற்சி, சாந்தம், அமைதி, தன்னடக்கம் இவற்றையெல்லாம் அழகிய உபதேசங்களால் கற்பதைவிட, முன்மாதிரியின் மூலம் மிகச் சிறப்பாகக் கற்பிக்க முடியும். பெற்றோர்களே, உயர்ந்ததோர் இலட்சியத்தை கைக்கொண்டு, எப்போதும் அதற்கொத்தவாறே வாழுங்கள். அப்போது அந்த இலட்சியத்தை உங்கள் குழந்தையும் சிறிது சிறிதாகத் தன்னுள் பிரதிபலிப்பதையும், நீங்கள் அவனுடைய இயற்கையில் காண விரும்பும் குணங்கள் அவன் இயல்பாகவே வெளிப்படுத்துவதையும் காண்பீர்கள். ஒரு குழந்தைக்குத் தன் பெற்றோரிடம் இயல்பாகவே நன்மதிப்பு இருக்கும்.